# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW-11 |
| Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Father's / Husband Name | : | மாரப்பகவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர், சூரமங்கலம் காவல்நிலையம் |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.M.Senthilkumar, Superintendent of this court on the day 28.01.2026 Evidence Recorded from a.m. / p.m. to a.m. / p.m.

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

**நான் தற்சமயம் சூரமங்கலம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.02.2019 ம் தேதி அம்மாபேட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்று இரவு 7.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. கார்த்திக்கேயன் அவர்களால் புலன்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்ட அம்மாபேட்டை**

காவல்நிலைய குற்ற எண்.36/2019, சட்டப்பிரிவுகள் 302 இ.த.ச வழக்கினை பார்வையிட்டு புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று இரவு 7.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை சர்ச் டார்ச்லைட் வெளிச்சத்தில் சாட்சிகள் ராஜேஸ்வரி, ஜீவஜோதி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்தேன். அந்த பார்வைமகஜர் அ.த.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரிவரைபடம் அ.த.சா.ஆ.13 ஆகும். பின்பு இரவு 8.45 மணிக்கு மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் காணப்பட்ட ரத்தம்படிந்த நிலையில் காணப்படும் கைக்கு அடக்கமான சிமெண்ட் செங்கல் துண்டுகள் இரண்டு, இரத்தம் படிந்த சிமெண்ட் காரை சிறிது மற்றும் இரத்தம் படியாத சிமெண்ட் காரை சிறிது ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது தான். பின்னிட்டு சம்பவயிட சாட்சிகள் விஜயலட்சுமி, ரமேஷ், சபரி, நெல்சன்பாலா, ராஜேஸ்வரி, ஜீவஜோதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து குவிமு.ச 161(3)ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 04.02.2019 ம் தேதி காலை 7.30 மணிக்கு சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு அருகே சென்று ஆறுமுகம் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொள்ள பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்தேன். பின்னிட்டு அன்று காலை 8 மணி முதல் 11 மணிவரை பஞ்சாயத்தார் முன்னிலையில் ஆறுமுகம் பிரேதத்தை ஆய்வு செய்து சாட்சிகள் விஜயலட்சுமி, ரமேஷ், பிரியங்கா, மாதேஸ்வரன், செந்தில்குமார்

ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.14 ஆகும். பின்னிட்டு பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்துடன் தலைமை காவலர் 856 திரு.சகாயராஜ் அவர்கள் மூலம் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு அன்று பகல் 3.30 மணிக்கு நான் அம்மாபேட்டை காவல்நிலையத்தில் இருந்த போது அம்மாபேட்டை டவுண் கிராம நிர்வாக அலுவலர் வேலுமணி மற்றும் கிராம உதவியாளர் செந்தில் குமார் வழக்கின் எதிரி பரத்குமார் மற்றும் பரத்குமாரிடம் பதிவுசெய்த வாக்குமூலம் ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒரு கடிதம் மூலம் என்னிடம் ஆஜர்படுத்தினார். நான் எதிரியின் வாக்குமூலத்தை பார்வையிட்டு எதிரியை விசாரித்த போது அவர் வழக்கு குற்றத்தை ஒப்புக் கொண்டதால் காவல்நிலையத்தில் வைத்து அன்று பகல் 3.45 மணிக்கு காரணம் கூறி எதிரியை கைது செய்தும், பின்பு எதிரி அன்று பகல் 4.00 மணிக்கு மேற்கண்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை கூட்டிட்டு போனால் நான் ஆறுமுகத்தை கொலை செய்த போது போட்டிருந்த இரத்தக்கறை படிந்திருந்த எனது பேண்டையும், சர்ட்டையும் வீட்டில் மறைத்து வைத்துள்ளதை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன். மேலும் அந்த பேண்ட் பாக்கெட்டில் உள்ள ஆறுமுகத்தை அறுத்த பிளேடையும் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே

அத.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது தான். எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் வழிக்காட்ட சாட்சிகளுடன் அவரது வீட்டிற்கு சென்று அவர் வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்த இரத்தக்கறை படிந்த வெள்ளை டார்க் மற்றும் லைட் புளு கலரில் கட்டம் போட்ட காலரில் X–Colors என்ற லேபிள் கொண்ட முழுக்கை சட்டை ஒன்றையும், இரத்தக்கறை படிந்த டார்க் பிரவுன் கலரில் பின்புறம் பாக்கெட்மேல் Grazyn என்ற லேபிள் கொண்ட பேண்ட் ஒன்றையும் எடுத்து பேண்ட் பாக்கெட்டில் இருந்த இரத்தக்கறை படிந்த சூப்பர் மேக்ஸ் அரை பிளேடுஒன்றையும் அடையாளம் காட்டி ஆஜர் செய்ததை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் 5.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.தசா.ஆ–6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் சா.பொ.4 முதல் சா.பொ.6 வரை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட தடயங்களுடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க பாதுகாப்பில் வைத்தேன். சாட்சிகள் வேலுமணி, செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் குவிமுச 161(3) ன்படி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்று இரவு 19.30 மணிக்கு தலைமை காவலர் 856 சகாயராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி ஆறுமுகம் பிரேத பரிசோதனையின் போது மருத்துவர் ஆஜர் செய்த பிரேதம் அணிந்திருந்த துணிகளை ஆஜர் செய்ததை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். மேற்படி துணிகள் நீதிமன்றத்தில் காட்டப்படுவது தான். அது பாசிகலர் சிவப்பு பாடர்போட்ட முழுகால் லோயர் பேண்ட் – ஒன்று. அது சா.பொ.7 ஆகும். அதுகுறித்த படிவம் 95 இது தான்.

இது அ.சா.ஆ.15 ஆகும். பின்னிட்டு அடைப்பு காவல் அறிக்கையுடன் எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 95 இரண்டு எண்ணிக்கைகள் அ.த.சா.ஆ.16 ஆகும். பின்னிட்டு 05.02.2019 அன்று சாட்சிகள் மருத்துவர் நாட்ராயன் அவர்களை விசாரணை செய்து குவிமுச 161(3)ன் படியான வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி அப்சர், மாதையன், பழனிமுத்து, கார்த்திக்கேயன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து குவிமுச பிரிவு 161 (3) ன்படியான வாக்குமூலம் பதிவு செய்தேன். 06.02.2019 அன்று சாட்சிகள் சபரி, நெல்சன்பாலா ஆகியேர்களை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் மோகன், கோமதி, ரேகா, லதா, ஜமுனாராணி, நாஜினி, பத்மாவதி ஆகியோர்களை விசாரணை செய்து குவிமுச 161 (3) ன்படியான வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்து போன ஆறுமுகம் உடலில் இருந்து சேதம் செய்யப்பட்ட உள்ளுறுப்புக்களை பகுப்பாய்விற்காக ரசாயன கூடத்திற்கு வேண்டுகோள் கடித்தத்துடன் அனுப்பி வைத்தேன். பிறகு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட கைப்பற்றப்பட்ட இரத்தக்கறை படிந்த செங்கல், இரத்தக்கறை படியாத காரை, இரத்தக்கறை படிந்த காரை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரத்தக்கறை படிந்த பேண்ட், சர்ட் மற்றும் பிளேடு ஆகியவற்றை இரசயான பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்க வேண்டி நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்பு 19.03.2019 அன்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சங்கீதா அவர்களை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் கருத்துரையும்

பெற்று குவிமு.ச பிரிவு 161 (3) ன்படியான வாக்குமூலம் பதிவு செய்தேன். உடல் உள்ளுறுப்புக்களை இரசாயன பகுப்பாய்வு மேற்கொண்ட அறிவியல் ஆய்வாளர் கீதா அவர்களை விசாரணை செய்து பகுப்பாய்வு அறிக்கை பெற்று குவிமு.ச பிரிவு 161 (3) ன்படியான வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் சகாயராஜ், சேகர் ஆகியோர்களை விசாரணை செய்து குவிமு.ச பிரிவு 161 (3) ன்படியான வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு கோவை மண்டல தடய அறிவியல் துறையினரிடமிருந்து குருதியியல் அறிக்கை நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நீதிமன்றத்திலிருந்து அதன் நகலை பெற்றேன். சென்னை தடய அறிவியல் துறையிடமிருந்து வேதியியல் அறிக்கை நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் நகலை நீதிமன்றத்திலிருந்து பெற்றேன். மேற்படி வேதியியல் அறிக்கை ஒன்று அ.த.சா.ஆ.17, குருதியியல் அறிக்கைகள் இரண்டு எண்ணிக்கைகள் அ.த.சா.ஆ.18 ஆகும். இவ்வழக்கில் இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி மீது இ.த.ச 302ன் படியான இறுதி அறிக்கையினை தயார் செய்து அரசு குற்றவியல் தொடர்வுத்துறை, துணை இயக்குநர் அவர்களின் கருத்துரை பெற்று 21.05.0219 அன்று தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் அ.சா.1, 2, 3, 4, 5 ஆகியோர்கள் என்னுடைய விசாரணையின் போது பதிவு செய்ய குவிமு.ச பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்தில் கண்டுள்ளவாறே சொல்லியிருந்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவயிடமானது அம்மாபேட்டை காவல்நிலையத்திலிருந்து சுமார் 70 அடி தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு வெளியே எப்பொழுதும் காவல்நிலைய பாரா இருப்பார் என்று சொன்னால் சரிதான். சம்பவம் குறித்த தகவலானது நிலையத்திற்கு சம்பவம் நடந்து 2.15 மணி நேரத்திற்கு பிறகு அ.சா.1னின் புகாருக்கு பிறகு தான் தெரியவந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவயிட பள்ளிக்கூடத்தில் மின்சார வசதி உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிட பள்ளிக்கூடத்தில் விடுமுறை தினங்களில் மாணவர்கள் விளையாடுவார்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு மாணவர்கள் விளையாடும் பொழுது பந்து காவல்நிலைய கட்டிடத்திற்குள் வந்து விழும் என்று சொன்னால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு அருகே நிறைய கடைகளும், குடியிருப்பு வீடுகளும் உள்ளது என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து 200 அடி தள்ளி பலப்பட்டறை மாரியம்மன் கோவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிட பள்ளியை ஒட்டி முனிசிபல் ஆபீஸ்சும், சிமெண்ட் கடையும் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் குறித்து அக்கம் பக்கம் உள்ள நபர்கள் சென்று பார்த்து சத்தம் போடவே எங்கள் நிலையத்திலிருந்து சிலர் சென்று காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து 03.02.2019 அன்று மாலை 7.00 மணியளவில் முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்ட பிறகு தான் எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.1–ல் எதிரி பரத் மீது சந்தேகம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது

என்று சொன்னால் அவ்வாறு இல்லை. எதிரி பரத் குமார் தான் கொலை செய்துள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினமே 7.15 மணிக்கு சம்பவயிடம் சென்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் 2, 3, 4, 5, 6 7 ஆகியோர்கள் சம்பவயிடத்திற்கு அருகில் வசிக்கின்ற அ.சா.1 னின் உறவினர்கள் என்று சொன்னால் பட்டியல் சாட்சி 5, 6 யைத் தவிர மற்றவர்கள் உறவினர்கள். சம்பவயிடத்தில் 03.02.2019 ம் அன்று மாலை 7.15 மணியிலிருந்து 12 மணிவரை விசாரணை மேற்கொண்டேன். உங்கள் விசாரணையின் பொழுது சம்பவயிட பணியில் மின்விளக்கு வசதி உள்ள நிலையில் எதற்காக சர்ச் லைட், டார்ச் லைட் எடுத்து சென்றிருந்தீர்கள் என்று சொன்னால் சம்பவயிட பள்ளி அறையில் மின்விளக்கு இல்லை. எனவே அவைகளை எடுத்து சென்றேன். அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்திலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். புகாரில் எதிரி குறித்து குறிப்பிட்டுள்ள நிலையில் எதிரியை உடனே தேடி அவரது வீட்டிற்கு சென்றீர்களா என்றால் விசாரணை செய்து கொண்டிருந்ததால் உடனே செல்லவில்லை. எதிரியை 04.02.2019 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் அ.சா.7 காவல்நிலையத்தில் ஆஜர்படுத்தினார் என்று சொன்னால் சரிதான். எதிரி அ.சா.7 யிடம் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதாக சொல்லப்படுகின்ற சங்கதிகளை அ.சா.7 வீடியோ எடுத்து வீடியோவுடன் ஆஜர் செய்தாரா என்றால் வீடியோவை ஆஜர் செய்யவில்லை. எதிரி அவரது வீட்டை எதிரி தான் அடையாளம்

காட்டினார். காவல் நிலையத்திலிருந்து எதிரியின் வீடு சுமார் ½ கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தனது மகன் ஆறுமுகம் சற்று மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும், யாரை பார்த்தாலும் கெட்ட கெட்ட வார்த்தையால் திட்டுவார் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் பகுதி சரி. மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று குறிப்பிடவில்லை. சம்பவயிட பள்ளிக்கட்டிடம் சரியாக கட்டப்படாமல் ஆங்காங்கே சில வகுப்பறைகள் இடிந்தும் காணப்படுகிறது என்று சொன்னால் இல்லை. சம்பவயிட வகுப்பறை குறிப்பாக எத்தனாவது வகுப்பறை அந்த கட்டிடம் எந்த தளத்தில் உள்ளது என்று பார்வைமகஜர் மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பார்வைமகஜர், வரைபடத்தில் குறிப்பாக சம்பவம் இடம் குறித்து அடையாளம் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு தெளிவாக குறிப்பிட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் சட்டை, பேண்ட்டின் சைஸ் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதில் இருந்தால் குறிப்பிட்டிருப்பேன். எதிரியின் துணிமணியில் பேண்ட் சட்டையில் இரத்தக்கறை படிந்திருந்தது குறிப்பாக எந்த இடத்தில் இருந்தது என்று ஞாபகமில்லை. இரத்தம் தெளித்த மாதிரி இருந்ததா, உறைந்திருந்ததா என்றால் இரத்தக்கறையுடன் இருந்தது. சா.பொ.6 பிளேடு எங்கே வாங்கப்பட்டது அதன் பாதி பிளேடு எங்கே என்ற விவரத்தை விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் எதிரியிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன். எங்கு வாங்கப்பட்டது என்று குறிப்பாக விசாரிக்கவில்லை. எதிரியின் கையில் மேற்படி பிளேடு சா.பொ.1 யை பயன்படுத்திய பொழுது காயம் ஏதாவது அவருக்கு ஏற்பட்டதா என்று விசாரித்து பார்த்தீர்களா

என்றால் விசாரித்து பார்த்தேன். அவரது கையில் காயம் ஏதுவும் இல்லை. சா.பொ.6, சா.பொ.4, 5 எதிரியின் உடைகளில் இறந்து போன நபரின் உடைகளில் இருந்த இரத்தக்கறையை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக தடயம் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரேத பரிசோதனையானது 04.02.2019 அன்று பகல் 12.35 மணியளவில் துவங்கி அன்றையதினம் 1.30 மணியளவில் முடிக்கப்பட்டு பிரேதத்தின் மீது இருந்த துணிகளை பட்டியல் சாட்சி 22 04.02.2019 இரவு 19.30 மணியளவில் என்னிடம் ஒப்படைத்தார். ஆனால் எதிரியானவர் 04.02.2019 அன்று மாலை 5.15 மணியளவில் அவரது வீட்டிலிருந்து சா.பொ.4 முதல் சப.பொ.6 இரத்தக்கறை படிந்த பிளேடு, அவரது பேண்ட், சர்ட்டை அடையாளம் கண்டு எடுத்து ஒப்படைத்தார். அ.சா.1 புகார் கொடுப்பதற்கு முன்பே எதிரியை போலிசார் காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருந்ததாக அவருடைய குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. அ.சா.1 போலிசார் சொல்லச்சொல்ல தான் புகாரை எழுதியதாக குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் தவறு. அ.த.சா.ஆ–1 புகார் அ.சா.1 03.02.2019 இரவு 12 மணியளவில் போலிசார் சொல்ல சொல்ல எழுதி கொடுத்துள்ளதாக குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது தவறு. சம்பவம் நடந்தவுடன் காவலர்கள் சம்பவயிடம் சென்று அடிபட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றாலும் எனவே சம்பவம் குறித்து உடனேயே காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் அ.சா.7 னிடம் எதிரி சரணடைந்திருக்கவில்லை என்றாலும்

சொல்வது போல் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எதிரி கொடுத்திருக்கவில்லை என்றாலும், உங்களிடமும் எதிரி சொல்வது போல ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து சொன்ன சான்று பொருட்கள் 4, 5, 6, 7 எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கு எதிரான தடயங்களும் ஆவணங்களும் பின்னிட்டு நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னாலும் சரியல்ல. நான் சரிவர விசாரித்து உண்மைத் தன்மையை தெரிந்து கொள்ளாமல் எதிரிமீது தவறான குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.